4. மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

4.1. மலைத் தோட்டப் பயிர்களுக்கான வருமானக் காப்பீட்டுத் திட்டம்

துவக்கம்: 10, பிப்ரவரி, 2017

திட்டகாலம்: 2 ஆண்டுகள்

நோக்கம்: இரட்டை ஆபத்துகளிலிருந்து மலைத்தோட்டப் பயிர்களின் உரிமையாளர்களைப் பாதுகாத்தல்.

குறிக்கோள்:

- நோய் தாக்குதல் , பாதகமான வானிலை நிகழ்வுகள் போன்றவற்றின் காரணமாக காரணமாக மகசூல் இழப்பின் இரட்டை அபாயங்களில் இருந்து மலைத் தோட்டப் பயிர்களின் உரிமையாளர்களைப் பாதுகாத்தல்.
- பயிர் காப்பீடு நெறிமுறையின் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் ஏற்படும் விளைப்பொருட்களுக்கான விலை வீழ்ச்சியின் காரணமாக உண்டாகும் வருவாய் இழப்பிலிருந்து மலைத்தோட்டப் பயிர்களின் உரிமையாளர்களைப் பாதுகாத்தல். அதன் மூலம் மலைத்தோட்ட பயிர்களின் உரிமையாளர்களைப் பாதுகாத்தல். அதன் மூலம் மலைத்தோட்ட பயிர்களின் விவசாயிகளினுடைய நல்வாழ்வு நிலையான நீடித்தத் தன்மையை உறுதிசெய்ய அவர்களின் வருவாயை நிலைப்படுத்துதல்.

திட்ட விளக்கம்: இத்திட்டமானது 10 ஹெக்டேர் அல்லது அதற்கு குறைவாக நிலத்தினை கொண்டுள்ள ரப்பர் , தேயிலை, காபி (ரோபுஸ்டா வகை மற்றும் அராபிகா வகை), புகையிலை, ஏலக்காய் போன்ற மலைத் தோட்டப் பயிர்களின் உரிமையாளர்களை இத்திட்டம் உள்ளடக்கியதாகும்.

4.2. ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம்

துவக்கம்: 16-ஜனவரி 2010

நோக்கம்: ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உகந்த சூழலை உருவாக்குவதன் மூலம் நாட்டில் புத்தாக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் தொழில்முனைவுத் தன்மையை வளர்த்தல்.

குறிக்கோள்:

- நாட்டில் ஸ்டார்ட் அப் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக மொத்தம் 10,000 கோடி ரூபாய் உடைய நிதியத்தின் நிதியம் மூலம் ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு நிதி ஆதரவினை வழங்குதல்.
- நிதியத்தில் மேற்கொள்ளப்படும் மூலதன வரவுகளின் மீது ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு வரி விலக்கலை வழங்குதல்.
- 3 ஆண்டுகளுக்கு ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு தொழிலாளர் பரிசோதனையிலிருந்து விலக்களித்தல்.

நிதியளிப்பு: இந்திய சிறு தொழிற்சாலைகள் மேம்பாட்டு வங்கியின் மூலம் ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு கடன் உத்தரவாத நிதியை வழங்குதல்.

திட்ட விளக்கம்: இத்திட்டத்தின்படி ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் என்பவை இந்தியாவில் தலைமையகத்தைக் கொண்டுள்ள . ஐந்து ஆண்டுக்கும் குறைவான காலத்திற்கு முன்பு துவக்கப்பட்ட . 25 லட்சத்திற்கும் குறைவாக வருடாந்திர வருவானமுடைய நிறுவனங்களாகும்.

4.3. தேசிய தரநிலைகள் உத்திசார் ஆவணம்

துவக்கம்: மே, 2017

திட்ட காலம்: 5 ஆண்டுகள்

குறிக்கோள்: உள்நாட்டுச் சந்தையிலிருந்து தரம் குறைவான தொழிற்சாலை உற்பத்திப் பொருட்களை களைந்தெறிதல். உயர் தரமுடைய தொழிற்சாலை உற்பத்தி பொருட்களின் இந்திய ஏற்றுமதியை ஊக்குவித்தல்.

குறிக்கோள்: இந்திய நுகர்வோர்கள் மற்றும் உள்நாட்டு தொழிற்சாலைகளை மோசமாக பாதிக்கின்ற பாதுகாப்பற்ற மற்றும் தரம் குறைவான இறக்குமதிப் பொருட்கள் இந்தியாவின் உள்நாட்டுச் சந்தையில் குவிவதை தடுப்பதற்கு உதவுதல்.

உலக வர்த்தகத்தின்போக்கு மாறிவரும் தற்போதைய சூழலில் பொருட்களுடைய தரத்தின் மீது அதிகரித்து வரும் முக்கியத்துவத்தின் மீது தர உத்திரவாத மதிப்பீட்டு அமைப்புகள், ஒழுங்குமுறை தரநிலைகள் நிர்ணயிப்பு அமைப்பு . மாநில அரசுகள், மத்திய அமைச்சகங்கள் . தொழிற்சாலைகளைத் தயார் படுத்துதல் மற்றும் அவற்றிற்கிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

4.4. இந்தியாவிலிருந்து வணிகப் பொருட்கள் ஏற்றுமதி திட்டம்

துவக்கம்: 01, ஏப்ரல், 2015

திட்டகாலம்: 2015-20

நோக்கம்: இந்தியாவில் தயாரிக்கப்பட்ட / உற்பத்தி செய்யப்பட்ட குறிப்பிட்ட பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவித்தல்.

வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையின் கீழ் உள்ள பிற திட்டங்கள்.

1. **சந்தை ஆவனத் திட்டம்:** ஒரு வர்த்தகப் போட்டியாளராக வெளிநாடுகளில் இந்தியப் பொருட்களின் ஏற்புடைமையை அதிகரிப்பதற்கான திட்டத்தோடு வெளிநாட்டுச் சந்தைகளை இலக்கிடுவதற்காக உயர் சரக்கு போக்குவரத்து செலவு மற்றும் பிற வரிகளை குறைத்தல்.
2. **உற்பத்தி பொருள் கவனத்திட்டம் :**
   இந்திய உற்பத்திப் பொருட்களின் சந்தைப்படுத்துதலோடு சம்பந்தப்பட்ட உள்கட்டமைப்பு குறைபாடுகள் மற்றும் தொடர்புடைய பிற செலவுகளை ஈடுசெய்வதற்காக, உயர் ஏற்றுமதி தீவிரமும் , அதிக வேலை வாய்ப்புகளை வழங்கும் ஆற்றலும் உடைய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவித்தல்.
3. **இந்தியாவிலிருந்து சேவையளித்தல் திட்டம் :**
   இத்திட்டமானது சர்வதேச சந்தைகளில் ஓர் தனித்துவமான மற்றும் சக்திவாய்ந்த இந்தியாவிலிருந்து சேவையளிக்கப்பட்டவை எனும் ஒரு நிலையான தரத்தை ஏற்படுத்துவதற்காக இந்தியாவின் சேவைகளுடைய ஏற்றுமதியின் வளர்ச்சியை துரிதப்படுத்த இத்திட்டம் உதவும்.
4. **விஷேஷ் கிரிஷி மற்றும் கிராம் உத்யோக் யோஜனா :**
   நோக்கம்: இது வன உற்பத்திப் பொருட்கள் மற்றும் வேளாண் விளைப் பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக ஏற்றுமதிகளுக்குள்ள பிற குறைபாடுகளை ஈடு செய்வதும், அப்பொருட்களின் உயர் சரக்குப் போக்குவரத்து செலவினை குறைத்து அதனை ஈடு செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

கடன் தீர்வை ரசீது: இது ஓர் அனுமதிச்சீட்டாகும். இதனைக் கொண்டிருப்பவர் இறக்குமதிக்கான தீர்வைகளில் குறிப்பிட்ட தொகையினை செலுத்தாமல் பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுவர். மேலும் இந்த அனுமதி சீட்டை சந்தைகளிலும் விற்கலாம். இத்திட்டத்தின் படி ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களுடைய ஏற்றுமதியின் மொத்த மதிப்பில் ஒரு குறிப்பிட்ட சதவிதம் என்று நிர்ணயிக்கப்பட்ட தீர்வை விலக்கு ரசீதுகள் வழங்கப்படும்.

4.5. E-Biz

துவக்கம்: 19, பிப்ரவரி, 2015

நோக்கம்: ஆன்லைன் இணையவாயலின் அரசுகளிலிருந்து வணிகங்களுக்கான சேவைகளுக்கு Government to Business (G2B) வேகமான மற்றும் திறனுடைய அணுகல்களை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டில் வணிகம் புரிவதற்கான தழலை அதிகரிக்க உதவும் ஒரு மேடையே E-Biz ஆகும்.

திட்ட விளக்கம்: இத்திட்டமானது தேசிய மின்-ஆளுகைத் திட்டத்தின் கீழ் உள்ள 27 பணி நோக்கமுடையத் திட்டங்களின் ஒரு பகுதியாகும்.

4.6. நிர்யத் பந்து திட்டம்

துவக்கம்: 27- மார்ச் - 2017

நோக்கம்: புதிய மற்றும் ஆற்றலுடைய ஏற்றுமதியாளர்களை அடையாளம் கண்டு அவர்களை அடைதல். மேலும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியை ஊக்குவிக்கவும் மற்றும் அப்புதிய மற்றும் ஆற்றலுடைய ஏற்றுமதியாளர்கள் சர்வதேச வத்தகத்தில் ஈடுபடவும் தனிப்பட்ட வசதிப்படுத்துதல். ஆலோசனைக் கூடுகைகள், நெறிப்படுத்து திட்டங்கள் மூலம் அவர்களுக்கு வழிகாட்டுதல்.

திட்ட விளக்கம்: இத்திட்டத்தின் கீழ் வெளிநாட்டு வர்த்தகத்திற்கான பொது இயக்குனரகத்தின் அதிகாரிகள் சட்டப்பூர்வ வழியில் தங்களது ஏற்றுமதி வணிகத்தை மேற்கொள்ள விரும்பும் ஆர்வமுடைய தனி நபர்களுக்கு தங்களது நேரம் மற்றும் அறிவாற்றலை முதலீடு செய்து வழிகாட்டுவர்.

4.7. அறிவு சார் சொத்துரிமை விழிப்புணர்விற்கான திட்டம்

துவக்கம்: 07, ஜூலை 2017

துவங்கிய அமைப்பு: அறிவு சார் சொத்துரிமை மேம்பாடு மற்றும் மேலாண்மைக்கான பிரிவு

திட்டகாலம்: 2017-2020 (3 ஆண்டுகள்)

நோக்கம்: ஊரகப் பகுதிகள் மற்றும் Tire I, Tire II, Tier III நகரங்கள் உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும், மாணவர்கள், இளைஞர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள், வளரும் கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தொழில்முறை வல்லுநர்கள் ஆராய்ச்சி மேற்கொள்ளவும், புத்தாக்கங்களை மேற்கொள்ளவும், மேலும் தங்களது புத்தாக்கங்கள் மற்றும் கண்டுபிடிப்புகளை பாதுகாத்திடவும் கவருவதற்காக அவர்களிடையே அறிவுசார் சொத்துரிமையின் மீது விழிப்புணர்வை அதிகரித்தல்.

குறிக்கோள்: ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் , மற்றும் சிறு , குறு, நடுத்தர தொழிற் அமைப்புகள் உட்பட அனைத்து தொழிற்சாலை அமைப்புகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் அறிவுசார் சொத்துரிமையின் விழிப்புணர்வு மீது 4000 பயிற்சிப்பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துதல் மற்றும் அமலாக்க

நிறுவனங்கள் மற்றும் நீதித்துறை அமைப்புகளுக்காக அறிவுசார் சொத்துரிமை பயிற்சி மற்றும் அறிவு உணர்வாக்கத் திட்டங்களை நடத்துதல்.

பயிற்சி வகைகள்:

- ஆரம்ப பள்ளிகள்
- இரண்டாம் நிலை பள்ளிகள்
- பல்கலைக் கழகங்கள் / கல்லூரிகள்
- MSMEA ஸ்டார்ட் அப் உட்பட தொழிற்சாலைகள்

முழக்கம்: படைப்பாக்க இந்தியா; புத்தாக்க இந்தியா.

எங்களது Facebook பக்கம்

English – Examsdaily தமிழ் – Examsdaily Tamil

எங்களது WhatsAPP Group-Click Here

Telegram Channel கிளிக் செய்யவும்